2012 மார்ச் 28]

செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அந்தக் கிளை நிலையம் பெரு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக மாற்றுவதற்குச் சில விதிமுறைகள் உள்ளன. 5,000 கால்நடைகள் அந்தக் கிளை நிலையத்திற்கு வரவேண்டும்; 5 கி.மீ. சுற்றளவுக்கு வேறு எந்தக் கிளை நிலையமும் இருக்கக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. அதற்கு உட்பட்டிருந்தால், நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆரணி தொகுதிக்குட்பட்ட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது, ஊத்தங்கரை தொகுதி கே. எட்டிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்த கேள்வி. இதுகுறித்து நீங்கள் கேளுங்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: தச்சூரிலே ஒரு கால்நடைக் கிளை மருத்துவ நிலையம் அமைப்பதற்கு அரசிடம் பரிசீலனை ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை. தனிக் கேள்வி கேட்கவும்.

அடுத்து, வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

பேருந்து வசதி

*7692—**திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து ஆந்தக்குடி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம்–ஆந்தக்குடி தட நீளம் 30 கி.மீ. ஆகும். நாகப்பட்டினம்–கடலாடி வரையிலான 24 கி.மீ. தடப் பகுதியில், தினசரி இரண்டு பேருந்துகள்மூலம் 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாகப்பட்டினம்–ஆந்தக்குடிக்குத் தட நீளம் 30 கி.மீ அளவிற்கு, 6 கி.மீ தட வழி நீட்டிப்பு செய்யப்பட வேண்டி உள்ளது. இந்தப் பகுதிகளுக்குப் பேருந்து வசதிகள் அளிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று நாகப்பட்டினம்–கடலாடி, திருமங்கலம், பிச்சைமங்களம், ஆந்தக்குடி வழித் தடத்தில் விரைவில் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆந்தக்குடி–நாகப்பட்டினத்திற்குப் பேருந்து இயக்குவதற்கு உறுதியளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து இரயில் போக்குவரத்து இல்லாத காரணத்தால், சென்னைக்கு வருகின்றவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே,*

2012 மார்ச் 28]

அதிராம்பட்டினம், மதுக்கூர் வழியாகச் சென்னைக்குப் புதிய பேருந்து ஒன்றை விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 473 புதிய பேருந்துகளை வாங்க உத்தரவிட்டு, அந்தப் பேருந்துகளுக்குக் கூண்டு கட்டுகின்ற பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற வழித் தடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவைப் பெற்று பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) நிதிநிலை அறிக்கையை விமர்சித்து தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன். என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், please sit down. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு ஒரு முக்கிய பிரச்சினை குறித்து மாண்புமிகு போற்றுதலுக்குரிய முதல்வர் புரட்சித் தலைவி